# முக்கியமான நிகழ்வுண்மைகள் ஆவணம்
# நிலையான வைப்புகள்

## வலிபெல் பினான்ஸ்

# நிலையான வைப்புகள்

இது பல்வகைமையான மக்கள் மத்தியில் ஒரு தசாப்தகாலமாக நெருக்கமான உறவை; பேணிய மற்றும்; நம்பிக்கை உணர்வைக் கட்டியெழுப்பிய ஒரு வங்கிப் புனைவுச்சேவையாகும;.

வலிபெல் பினான்ஸ் மாதந்தோறும் அல்லது முதிர்ச்சிக்காலத்தில் கொடுப்பனவுசெய்யப்படும் வட்டியுடன் நிலையான வைப்புகள் குறித்த பல விருப்புத்தெரிவுகளை உங்களுக்கு வழங்குகின்றது.

## வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்கள்

- முதலீடு மறறும் மூலதனம் மீதான வருமானத்துக்கு உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.
- கவர்ச்சிகரமான வட்டிவீதங்கள்
- அதிசிறந்த வாடிக்கையாளர் சேவை
- வாடிக்கையாளரின் தெரிவின்பேரில் மாதாந்தம் அல்லது முதிர்ச்சிக்காலத்தில் வட்டி செலுத்தப்படும்.
- 1 மாதம் தொடக்கம் 60 மாதங்கள் வரையிலான காலப்பகுதியின் அடிப்படையில் வட்டிவீதங்கள் அமைந்திருக்கும்.
- 60 வயதுக்குமேற்பட்ட மூத்த பிரஜைகள் உயர்வான வட்டிவீதத்துக்குத் தகுதிபெறுவர்.
- உங்கள் நிலையான வைப்புகள்மீது கடன் பெறலாம். பயன்படுத்தப்படும் தொகை;கு மாத்திரம் வட்டி அறவீடு.
- தகுதிவாய்ந்த வைப்புப்பொறுப்புகள் இலங்கை வைப்புகள் காப்புறுதி திட்டத்தில் காப்புறுதிசெய்யப்படும்.
- இலவச முதலீட்டு ஆலோசனை சேவைகள்

## முக்கிய புனைவுச்சேவை அம்சங்கள் நியதிகள் மற்றும் நிபந்தனைகள;

- வைப்பாளர் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப்பிரஜையாக அல்லது குடியிருப்பு விசாவை கொண்டிருத்தல் வேண்டும;. மற்றும் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ஃ கடவுச்சீட்டை வைத்திருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் அல்லது அதிகூடுதலாக மூன்று நபர்கள் இணைந்தவகையில் வைப்புகளைச்செய்யலாம்.
- கூட்டாமைகளிலிருந்தும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் (உ-ம்: சங்கங்கள் நம்பிக்கைபொறுப்புகள் அறக்கட்டளைகள் போன்றவ) வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- அதிகுறைவான வைப்புத்தொகை ரூபா.5000.00 ஆகும்.

## வட்டிவீதங்களும் கொடுப்பனவு முறையும்

- நிலவும் வட்டி வீதங்களுக்கு வலிபெல் பினான்ஸ் வெப்தளத்தை அணுகவும். https://www.valibelfinance.com/product/fixed deposits.

- வாடிக்கையாளரின் விருப்புத்தெரிவின்பேரில் வட்டி மாதந்தோறும் அல்லது முதிர்ச்சிக்காலத்தில் செலுத்தப்படலாம். வட்டியானது எளிய வட்டி வீதப்படி; கணிப்பிடப்பட்டு காலத்தின் இறுதியில் வழங்கப்படும்.; நிரந்தர வைப்பு தவணை முடிவில் கணிப்பிடப்பட்டு வழங்கப்படும். மாதந்தோறும் வட்டி செலுத்தப்படும் விடயங்களில் அது ஒவவொரு மாதமும் கணிப்பிடப்பட்டு வழங்கப்படும். மாதாந்த வட்டிக் கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாதமும் வைப்புச்செய்யப்பட்ட திகதியில் மேற்கொள்ளப்படும்.

## முதிர்ச்சிக்கு முன்பாக வைப்பை மீளப்பெறுதல்

- நிரந்தர வைபானது குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சித்திகதிக்கு முன்னராக மீளப்பெறப்பட்டால் முகாமைத்துவ தீர்மானத்துக்கு அமைய; தண்டப் பணம்; அறவிடப்படும்.

## தன்னியக்கமாக இடம்பெறும் புதுப்பித்தல்

- முதிர்ச்சித்திகதிக்கு முன்னராக வைப்பைப் புதுப்பித்தல் அல்லது மீளப்பெறுதல் சம்பந்தமான நியதிகளில் ஏதாவது மாற்றம் குறித்து கம்பனிக்கு அறிவிக்காத சந்தர்ப்பத்தில் வட்டி உள்ளிட்டவகையில் வைப்பு அதையொத்த ஒரு காலப்பகுதிக்குப் புதுப்பிக்கப்படும்.

## வரிப்பொறுப்பு

- நிலையான வைப்புகளுக்கான வட்டி நிலவும் பிடித்துவைத்தல் வரி (WHT) பிரமாணங்களுக்கமைவானதாகும். கம்பனிகள் மற்றும் வேறு அமைப்புகள் சம்பாதிக்கும் வட்டி வருமானம் வருமானவரி மற்றும் வேறு அரசாங்க அறவீடுகளுக்கும் கீழ்ப்பட்டதாகும்.

## வைப்புக் காப்புறுதி பாதுகாப்பு

- தகுதிவாய்ந்த வைப்புகளுக்கு அதிகூடுதலாக 600000.00 ரூபா இழப்பீடு வழங்கும் வகையில் நாணயச் சபையினால் நடைமுறைக்கிடப்படும் இலங்கை வைப்புகள் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படும்.

## இணைந்த வைப்புகள்

- மூத்த பிரஜைகளின் இணைந்த வைப்புகள் விடயத்தில் கணக்கு வைத்திருப்போர் அனைவரும் மூத்த பிரஜைகள் வட்டிவீதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மூத்த பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- இணைந்த வைப்புகள் விடயத்தில் வைப்பாளர் ஒருவர் மரணமுற்றால் அது உடனடியாகவே கம்பனிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். கம்பனி உயிரோடு இருப்பவரை மாத்திரமே வைப்புக்கு உரியவராக அங்கீகரிக்கும்.

## நிலையான வைப்புகள்மீதான கடன்கள்

முகாமைத்துவத்தின் அனுமதியுடன்; வைப்பாளர்கள் தமது வைப்புகள்மீதான கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய கடன்கள்மீதான வட்டி மற்றும் ஏனைய விதிப்பனவுகள் முகாமைத்துவத்தின் அனுமதியின் கீழ்; நிலவும் வட்டி வீதத்திற்கு அமைவாக; அமைந்திருக்கும்.

## செயலற்ற கணக்குகள்

கைவிடப்பட்ட நிலையான வைப்புகள் இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலுக்கமைவான நியம சட்ட நடவடிக்கைமுறைகளுக்கு இணக்கமான முறையில் கையாளப்படும். அதிகூடுதலாக 10 வருடங்களுக்கு கொடுக்கல் வாங்கல்களோ கடிதத்தொடர்புகளோ இல்லாத வைப்புகள் விடயத்தில் அவை செயலற்ற கணக்குகளாகக் கணிப்பிடப்பட்டு 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வியாபாரத்தொழில் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படும்.

ஏனைய பொருத்தமான நிபந்தனைகள் அனைத்தும் நிலையான வைப்புக்கணக்கை ஆரம்பிக்கும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும்.

## முறைப்பாடுகளைக் கையாளும் முறை

நீங்கள் பின்வரும் வழிமுறைகளில் எமது சேவைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

1. 94117480480 என்னும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் மத்தியநிலையத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை அறிவிக்கலாம்.
2. tellus@valibelfinance.com மின்னஞ்சல் முகவரிக்கு முறைப்பாடுகளை அறிவிக்கலாம்.
3. சிரேஷ்ட முகாமையாளர். செயல்முறை அபிவிருத்தி வலிபெல் பினான்ஸ் PLC இல 310 காலி வீதி கொழும்பு-03 என்னும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்கலாம்.
4. www.valibelfinance.com 'contact us'பக்கத்தின் ஊடாக அறிவிக்கலாம்;.

கம்பனியால் திருப்தியான தீர்வு வழங்கப்படாதபட்சத்தில் வாடிக்கையாளர் தனது முறைப்பாட்டை இலங்கை நிதியியல் முறைகேள் அதிகாரி அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்கலாம்.

நிதியியல் முறைகேள் அதிகாரி
நிதியியல் முறைகேள் அதிகாரி அலுவலகம்
143A வஜிர வீதி
கொழும்பு 05

தொடர்பு இல: 94112595624
தொலைநகல்: 94112595626
மின்னஞ்சல்; fosril@sltnet.lk
வெப்தளம்: www.financialombudsman.lk

முக்கியமான நிகழ்வுண்மைகள் ஆவணம் வலிபெல் பினான்ஸ் PLCயினால் வழங்கும் புனைபொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அம்சங்களை விளங்கிக்கொள்வதற்கு உதவுகின்றது. கம்பனி மேற்கூறப்பட்ட நியதிகள் நிபந்தனைகள் மற்றும் விதிப்பனவுகளைத் நிறுவனத்தின் தீர்மானத்துக்கு அமைய; எந்தவேளையிலும் மாற்றியமைப்பதற்கான உரிமையைக்கொண்டுள்ளது.